முழுப்பொருளையும் நம்மாலேயே உணரமுடிவதில்லை. அக நானூறு, புற நானூறு, அகத்திணை, புறத்திணை போன்றவைகளுக்குச் சரியான பொருளை சில சமயங்களில் நம்மாலேயே உணர முடியவில்லை. திரு. ம. பொ. சி. அவர்கள் கூறுகின்றபடி தமிழ் மூலம் தமிழை அறிந்தவர்கள் பெரும்பாலும் இருக்கின்ற காரணத்தால், அப்படிப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்கு வழி ஏற்படும் என்று கருதப்படுகிறது. இந்தத்துறை சென்னையிலே அமையவிருக்கின்ற காரணத்தால், ஆராய்ச்சிக் கருத்துக்களில் தவறுகள் ஏற்பட்டால் திருத்திக்கொள்ளவும், சரிப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பிருப்பதால், தமிழ்ப் பேராசிரியர்களைக் கலந்து கொள்ள வேண்டிய வாய்ப்பு பிற நாட்டாருக்கு ஏற்படுவதால் அப்படிப் பட்ட தவறுகள் அதிகமாக ஏற்பட வழி ஏற்படாது. நல்ல பல நிலைமைகள் ஏற்படுவதற்கு வழி உண்டாகும்.

திரு. ப. மகாதேவன் : சார், கார்ல்ட் வெல், போப் போன்றவர்களை நோக்கும்பொழுது திரு. ம. பொ. சி. அவர்களின் சந்தேகத்திற்கு ஆதாரமில்லை அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப்போக வேண்டாம்.

பொன்னேரி அரசுக் கலைக் கல்லூரி இட மாற்றம்.

* 690 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரியிலுள்ள அரசுக் கலைக் கல்லூரியை நந்தனத்திற்கு அல்லது வேறு ஏதேனும் இடத்திற்கு மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

ஜயம்கொண்டம் மருத்துவ மனையை விரிவு படுத்தல்.

* 691 வினா—**திரு. கலியமூர்த்தி என்ற அ. கு. மூர்த்தி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்கா, ஜெயங்கொண்டத்தில் உள்ள மருத்துவ மனையை (Government Hospital) விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ). அரசு ஆணை எண். 2420, பொதுப்பணித்துறை நாள் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதியில் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சுமார் ரூ. 3·70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.

THIRU T. MARTIN : First question Sir;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன முறை என்று தெரிய வில்லை. ஒரு கேள்வி முடிந்து, அடுத்த கேள்விக்கு விடை சொல்லி யாகி விட்டது. அப்படியிருக்கும்போது, 'First question' என்று சொல்லுகிறீர்களே.

THIRU T. MARTIN : Thank you, Sir.

1970 ஏப்ரல் 6]

முள்ளிப் பள்ளத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடம்.

* 692 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடத்திற்கு 6—12—1968-ல அடிக்கல் நாட்டப்பட்டும் அதற்கான பூர்வாங்க வேலைகள் துவங்க கால தாமதமேற்படுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியத்திற்கு போதிய நிதி வசதியில்லாமையால் முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்க தாமதமேற்பட்டன.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களிலே கட்டிட வேலைகளுக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கும், கட்டடம் முடிக்கப்படுவதற்குமிடையே பல ஆண்டுகள் கடந்து போகின்றன ? இந்தக் குறையைப் போக்க குறிப்பிட்ட காலத்துக்குள்ளாகவே, அடிக் கல் நாட்டப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாகவே இந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்கக் காலதாமதமேற்படுவதற்குக் காரணம், அங்கிருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் நிதிப் பற்றுக்குறை இருந்ததன் காரணமாக காலதாமத மானதாகக் கூறப்பட்டிருக்கிறது. நிதி வசதியைப் பெருக்க முயற்சி யெடுக்கப்பட்டு, ஓரளவிற்கு வரிகளை அதிகப்படுத்தியிருப்பதால் நிதி வசதி ஏற்பட்டிருக்கிறது என்றும், விரைவிலே அந்தத் திட்டம் முடிக்கப்படும் என்றும் குறிப்பு அங்கிருந்து கிடைத்திருக்கிறது.

மருத்துவச் சிகிச்சை பெற ஆசிரியர்களுக்கு அடையாள அட்டைகள்.

* 693 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிக்கூட ஆசிரியர்கள் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற சர்டிபிகேட் வாங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க அடையாள அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற அளிக்கவேண்டிய என். ஜி. ஓ. சான்றிதழுக்குப் பதிலாக, அடையாள அட்டைகள் அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர் களுக்கு வழங்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது அரசினர் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு மட்டுமே பயன்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எப்பொழுது முதல் அமுலுக்கு வரும் ? இப்பொழுது அதுமாதிரிக் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு ஆரம்பத்திலாவது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப் பொழுது அந்த அட்டைகள் அச்சிடப்பட்டு ஆங்காங்கு விநியோகிக்கப்பட விருக்கின்றன. பலருக்கு இப்பொழுது வழங்கும் முயற்சியை விரைவில்